உ

கொக்குவில் மேற்கு

மந்தார வன சந்திரசேகரப் பிள்ளையார்

# மும்மணிமாலை



"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

ஆக்கம் :

ஆசிரியர் வை. க. சிற்றம்பலம்,

*(முதுபெரும் புலவர், கலாபூஷணம்)*

*புலவர் மணி*

கொக்குவில் மேற்கு

மந்தார வன சந்திரசேகரப் பிள்ளையார்

# மும்மணிமாலை

## முகவுரை

பார்த்திப வருஷம் தைப்பூச தினம் (11.02.2006) அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் அகத்தியர் தேவாரத்திரட்டு முன்றோதலில் பங்குபற்றும் பாக்கியம் கிடைத்தது. அடியேன் 12ம் வயதில் சைவக் குருக்களிடம் சிவதீக்ஷை பெற்றேன். உருத்திராக்கம் அணியும் ஆசையிருந்தது. ஆனால் தாயார் கட்டளைப்படி ஒரு நல்லார் கையிலிருந்து பெறக் காத்திருந்தேன். மேற்படி மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் அன்று தம் கையால் எனக்கொரு அருமருந்தன்ன உருத்திராக்க மாலையைக் கழுத்தில் அணிந்தார். இளம்பருவ ஆசை 92 ஆம் வயதில் நிறைவேறிய உள்ளப் பூரிப்பும் அப்பேற்றைத் தந்த விநாயகப் பெருமான் மீது பக்திப் பிரவாகமும் குமிழ்ந்தன. வேழமுகத்து விநாயகனைப் பாடும் எண்ணம் உதித்தது. அதன் விளைவே இம் மும்மணிமாலை.

மும்மணிமாலை என்பது,

"மிகுந்த வெள்ளை கலித்துறை யகவல்
விருத்தம் மும்மணி விளம்புமந் தாதி"

எனப் பன்னிரு பாட்டியலில் விதிக்கப்பட்ட பிரபந்த வகையாகும்.

பண்டிதமணியின் ஆசியுடன் பாடத்தொடங்கி, இன்று வரை பாடும் பணியே பணியாக அருளப்பெற்றேன். திருவருள் வாழ்க.

**இணுவிலாசிரியர்,**
**அளவை வாசர்,**
**கொக்குவில்.**
**20.12.2008**

**வை. க. சிற்றம்பலம்,**
**(முதுபெரும் புலவர், கலாபூஷணம்)**
**புலவர்மணி**

## காப்பு

### நேரிசை வெண்பா

சந்திர சேகரனே சார்கொக்கூர் மேற்கிலே
மந்தார நீழற்கீழ் வாழ்பவனே – உன் தனை யான்
மும்மணியால் மாலை முழுதியற்றிச் சூட்டிடவுன்
செம்மலர்த்தாள் தந்தருள்வாய் சேர்ந்து.

### குரு வணக்கம்

பண்டித மாமணிதாள் பார்வித்து வான்தன்தாள்
தண்டமிழாற் பாடித் தலைசூடி – கொண்டிறைஞ்சி
மந்தார நீழல் வதிசித்தி நாயகனைப்
புந்தியுறப் பாடுவேன் புக்கு.

### அவையடக்கம்

செப்பு முறையறியாச் சேயேனின் பாமாலை
ஒப்பில தேனு முணர்ந் தறிஞர் – உப்பிலதென்
றுன்னாதெம் மந்தாரத் தும்பிக்கை யாற்கென்றே
பொன்னாக ஏற்பர் புரிந்து.

## நூல்

### 1. நேரிசை வெண்பா

சீர்சேர்மந் தாரநிழல் சிந்தி விநாயகனைப்
பார்போற்ற யானும் பணிந்தேத்தி – நேர்நின்றே
தேமலர்நீ ரிட்டே சிறந்ததாம் மும்மணி சேர்
பூமலரும் சூட்டுவேன் புக்கு

### 2. கட்டளைக் கலித்துறை

புகுந்தே யடியார் புடைநூழ்ந்துபோற்றிடு புண்ணியனே
அகந்தே ரமரரும் ஏத்தி வணங்க அருளிடுநீ
தகுந்தவம் மந்தார நீழலிற் பாட அடியேனுக்கும்
சுகந்தர வேண்டினன் தூயனேன் நெஞ்சிலும்
சுற்றுவோனே

### 3. விருத்தம்

சுற்றும் முற்றும் சூழலும் உலகினில்
அற்புதன் அளித்திட அதையறி யாதே
சற்று மிறைஞ்சிலன் - என்பாரும் சார்ந்திடின்
வற்றா தருளுவான் வல்லபை மணாளனே

### 4. வெண்பா

மணவாளன் எங்களின் மந்தார நீழல்
குணவாளன் தும்பிக்கை யானை – கணபதியை
எத்தியே போற்றும் இனிய அடியவரைக்
காத்தே யணைப்பான்கைக் கொண்டு

5. **கட்டளைக் கலித்துறை**

கொண்டருள் நம்பியாண் டார்நம்பி யன்பிற்
குழைந்திருந்தே
அண்டரும் போற்ற அமுதுண்ட ஆனை முகத்தவனே
தொண்டனென் றென்னையு மோரன்ப னென் கிறன்
கவிதையையும்
கண்டனை யேற்றனற் காப்பையுந் தாராய் கனிந்து
நன்றே.

6. **விருத்தம்**

நன்றுநன் றென்றே யந்த நல்லசெம் மனத்தின் செல்வி
நின்றவக் கூலி யாட்கு நிறைந்தபிட் டளித்தல் போல
ஒன்றிய மனத்தின் மாலை உவந்திடப் பாடி யேத்த
மன்றவென்னிடர்கெடுத்தேமாண்புடன் முன்னின்றானே

7. **நேரிசை வெண்பா**

நின்றமந் தாரத்தின் நீழல்வாழ் குஞ்சரநீ
என்று முனைக்குட்டிக் கும்பிட்டே - நன்றாக
பாடும் திருமுறைசேர் பண்பின் அடியேனை
வாடாமல் காத்தருள்வாய் வந்து

8. **கட்டளைக் கலித்துறை**

வந்தே கஜாசுரன் வாட்டிடக் கண்ட அமரரெலாம்
நொந்தே வருந்திடக் கண்டவர்துன்பம் நொடித்தகற்றக்
கந்தாக வந்த கஜமுகா நீயோரு கறபகமாய்
இந்தமந் தார மிருந்தா யெமக்கும் பயமிலையே.

9. **விருத்தம்**

இல்லறஞ் சிறக்க வைக்கும்
இனியன செய்யத் தூண்டும்
நல்லற மதனால் மக்கள்
நயர்ந்திட உலகில் வைக்கும்
மல்லன்மா ஞாலம் கொக்கூர்
மந்தாரத் தெய்வம் யார்க்கும்
பல்வகை மேன்மை நல்கி
பகை யோட்டும் பயமு மின்றே

10. **நேரிசை வெண்பா**

பயமுதல் துன்பம் பறந்தோட நல்கும்
கயமுகனாம் கற்பகத்தை நாளும் - வியந்தே
அறுகுமுதல் பத்திரத்தால் அர்ச்சிம்பார்க்கென்றும்
திறமுறவே செய்வன் சிறப்பு

11. **கட்டளைக் கலித்துறை**

சிறப்புடன்செல்வம் சிவஞானத்தோடு செழுமையான
அறத்தினல் வாழ்வும் அழகும் பொறுமை அனைத்து
மெல்லாம்
திறத்தினி லோங்கச் சிவன்மகன் சந்திர சேகரனே
பெறற்கரும் பேறுமே நல்கிடும் போற்றும்
பெருந்தவர்க்கே

12. விருத்தம்

பெருந்தேன்சேம் மலரெடுத்து பிறைநுதலிற் கரியை
பிறங்கிவரும் ஆவணியில் பெருஞ்சதுர்த்தித் திருநாள்
விருந்தாகப் பாலிளநீர் விரைநீரா லாட்டி
மிக்கபல காரவகை முக்கனிகள் படைத்சதே
வருந்தாது நோன்பிருந்து வரும்மாதச் சதுர்த்தி
வாரமாய் மந்தார மாமணியைச் போற்றி
கரும்பாருன் மனத்துடனக் காலமெல்லாம் நோற்பின்
கருணை பொழிந்துடன் வந்து கண்பார்ப்பான் போற்றீர்

13. நேரிசை வெண்பா

போற்றுவோர்க் கென்றும் புகழ்செல்வம் கல்வியோடு
ஆற்றுந் தொழில்யாவும் ஆக்கியே – சாற்றரிய
சிந்தா குலம் போக்கிச் செல்வக் கணபதியே
வந்தார நல்கும் வளம்

14. கட்டளைக் கலித்துறை

வளரும் விளக்கேற்றி வைகறை யாமமக் கோயிலிலே
உளமுங் களித்திட காதில் மணியோசை யுற்றிடவே
தளர்வின்றிக் கேட்கு மடியா ரவனருள் தாமடைய
அளவின்றி யேத்திப் பணிந்திட வையனு மாங்குறுமே

15. **விருத்தம்**

ஆங்குறு மன்பர் தங்கள்
அருவினை யகற்று மையன்
பாங்கிலக் கோயில் காக்கும்
பாவைநா கேஸ்வரி போல்
நீங்குறா தேத்து வார்க்கும்
நிகரின்றி யனைத்தும் நல்க
தீங்கிலார் தாமு மேத்திச்
சிறந்தனர் பல்லோ ருற்றே.

16. **நேரிசை வெண்பா**

உறுமன்பாம் நெய்சேர்த்தே யுள்ளத் தகழி
நிறைய அருள்திரி யிட்டே – முறைஞான
நல்லினக் கேற்றியே நாடிவிர தம்பிடித்தால்
அல்லலெலாந் தீர்ப்பான் அவன்.

17. **கட்டளைக் கலித்துறை**

அவனது அன்பினிற் சிக்கிய செல்லரா மாரடியார்
கவனமா யன்னான் திருவுரு வொன்றைமந் தாரநீழல்
தவமெனத் தாபித்துப் பூசையுஞ் செய்தவன் தாளடைந்தார்
சிவனவ னற்புதத் தால்நானும் பாடினேன் செல்வமென்றே

18. **விருத்தம்**

என்றுமே வந்து போற்றும்
        இனியநல் லடிய வர்க்கே
நன்றியா யவரை மேலாம்
        நன்னெறிப் படுத்தும் நீயே
ஒன்றுமே செய்யா வென்தன்
        உள்ளமும் அமர்ந்து வாழ்வாய்
கன்றினுக் கிரங்கி வைகும்
        கறவைபோல் கருணை யானே

19. **நேரிசை வெண்பா**

கருணைக் கடலே கஜாசுரனை வென்ற
பெருமைசேர் மூக்கட் பிரானே – ஒரு பெரும்
சந்திர சேகரனே சார்ந்தகொக் கூர் வாழும்
எந்தையே வந்தெமைக்கா ரின்று

20. **கட்டளைக் கலித்துறை**

இன்று மந் நாட்போ லிடர்செய் யசுரரை யிங்கிருந்தே
சென்றே யடர்ந்திடுஞ் செல்வா திகழ்குஞ் சரமுதலே
குன்றாது வந்துன் குரைகழல் ஏத்தின் குறையு முண்டோ
நன்றாக அன்னாரைக் காத்தருள் கொக்கூர் நயந்திருந்தே

21. **விருத்தம்**

இருந்திடு மந்தார நிழலில் வாழ்கின்ற எமதைங்கரா
அருந்துய ரால்வாடும் அநந்தனின் சாப மகற்றியந்த
திருந்திய மாலுக்குச் சாப விமோசனம் செய்த நீயே
விரும்பி யுனைம்பணியன்பர்க்கு மருளிட வேண்டினனே

22. **நேரிசை வெண்பா**

வேண்டியே கைதொழுவேன் விக்கினங்கள் வாராமல்
ஆண்டருளும் கொக்கூரில் அண்ணலே – துண்டா
மணி விளக்கா யுன்னையான் மாண்புடனே பாட
அணி விளக்காய் முன்னேநீ வா

23. **கட்டளைக் கலித்துறை**

வாழ எதிர்காலம் வாய்ப்பாகப் பாரத மாக்கதையை
சூழும்பொன்மேருவே ஏடாக வுன்தன் னொருமருப்பே
கோளில் லெழுத்தாணியாக எழுதிய கொற்றவ நீ
நாளும் கொக்கூரி லிருந்தனை நன்றுகாம் கும்பிடவே

24. **விருத்தம்**

கும்ப முனியின் கமண்டலம்
மீதிலோர் காக மதாய்
வெம்பக் கவிழ்த்தனை யன்றிமற்
றுன்தனை வேண்டாத முக்கண்

எம்பிரான் முப்புரம் அழித்திடச்
சென்றவத் தேரி னச்சை
உம் பரும் ஏங்கப் பொடித்தனை
உன்துணை எமக்கு முன்டே.

25. **நேரிசை வெண்பா**

உணர்வுக்கு மெட்டா முருகனை வள்ளி
மணமயரச் செய்தமந் தாரா – துணை யென்று
வந்திப்பார் தங்களுக்கும் மற்றார்க்கும் வாழ்வளிக்குந்
தந்தியே எந்தனுக்குந் தா

26. **கட்டளைக் கலித்துறை**

தனியனே னென்று தடுமாறி நின்றுளந் தத்தளிப்பீர்
இனியனாம் கொக்கூர் அமர்ந்தருள் சந்திர சேகரனை
பனிமல ரிட்டுப் பழவகை தீஞ்சுவைப் பாலமுதம்
நனிபடைத் தேத்துமின் போற்றுமின் நல்கிடும் நல்லருளே

27. **விருத்தம்**

அருளாளர் ஆசிரியர் இராசனிங்கம் நாளுமவ்
வைங்கரனை
இருகாலும் போற்றுவார் இடம்பெயர் காலைதன்
இடுக்கணினால்
பொருளான என்பொருளே இன்றேன் மறந்தனை
யென்றிரங்க
திருவாள னஃதறிந்தவரிடஞ் சென்றிடர் தீர்த்தானன்தே

28. **நேரிசை வெண்பா**

நன்றே யெழுந்தருளும் நாயகனாம் கற்பகத்தை
சென்றே வழிபட்டுச் சேவித்தே – நின்றவரை
நாலுபே ரேத்த நடுவைத்திப் பூமியிலே
சாலவே வாழவைப்பான் சார்ந்து

29. **கட்டளைக் கலித்துறை**

சார்ந்திடுங் கார்த்திகைத் திங்களில் பூர்வமாஞ்
சட்டிவரை
சேர்ந்திடும் நல்ல திருநா ளிருபத்தி யொன்றிலுமே
ஆர்ந்திடு மந்தார சந்திர சேகரன் தாள்நினைந்
தால்
ஓர்ந்திட் டவார்களுக் கெல்லாமே நல்குவ
னோங்கிடவே

30. **விருத்தம்**

ஓங்குநல் தவத்தின் மூழ்கி
யுறுபவ ரனைவ ருக்கும்
தீங்கரும் பெனவே யன்னார்
திருவுள்ளம் நிறைய நல்கி
பாங்கில்மந் தார நீழல்
பண்ணவன் கொக்கூர் மேற்கில்
பூங்கோயில் வீற்றிருப் பான்
புரிந்து ளோர்க் கருளிச் சீரே.

## நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | மஞ்சத்தடி, இணுவில், 16.09.1914 |
| தந்தை | : | வைத்தியலிங்கம் சந்தர் (இணுவில்)<br>(கோவலூர் வேளாளண் பேராயிரவன் சந்ததி, வேலாயுதர் முதலித்தம்பியின் முதல் மகன்).<br>ஆசாரசீலர், சைவானுஷ்டானம் தவறாத பரம்பரை) |
| தாய் | : | ஆனந்திப்பிள்ளை (இணுவில்)<br>(கொடிகுடை முருகர் சந்ததி, வேலாயுதரின் மூத்த மகள்)<br>29ம் வயதில் பெரியசந்நியாசியாரின் ஆசியுடன் மணம் நடந்தது.<br>முன்னோர் பற்றிய வரலாற்றுக்குறிப்பு சகோதரர் நினைவுமலரில் 04.05.2005இல் வெளிவந்துள்ளது. |
| தொழில் | : | விவசாயம், வியாபாரம் |
| சகோதரர்கள் | : | வை.க.சந்திரசேகரம்பிள்ளை<br>அபிராமிப்பிள்ளை நமசிவாயம்<br>சிற்றம்பலம் (ஆசிரியர்)<br>வைத்தியலிங்கம் ஆசிரியர்)<br>ஆச்சியம்மா செல்லையா<br>கனகசபை – ஆசிரியர். |

| | |
|---|---|
| இளமைக்கல்வி : | 1921–1922 இணுவில் அ.மி. பாடசாலை.<br>1923-1930 கோண்டாவில் சைவ வித்தி.<br>1929 சுதேச பாடசாலை விடுகை தராதரப் பந்திரப் பரீட்சை (Vernacular School leaving Certificate) சித்தி<br>1930-புதுமுகப் பரீட்சை (Prelim) சித்தி<br>1930-1932 ஆரம்ப ஆசிரியர் (இணுவில் மகாஜன வித்தியாலயம்.<br>1932-1934 ஆசிரியர் பயிற்சி (சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி)<br>பொ.கைலாசபதி உப அதிபர்<br>பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தொடர்பு<br>1934-1960 சைவ வித்தி. சங்க பாடசாலைகளில் உதவி ஆசிரியர்<br>1961-1970 அரசினர் பாடசாலை உதவி ஆசிரியர். |
| உயர்கல்வி : | 1937 இளந்தமிழ்ப்புலவர் (தென்னிந்தியத் தமிழ்ச் சங்க பரீட்சை சித்தி)<br>1939 பாலபண்டிதர் யா.ஆ.நி. பா. சங்கம்.<br>1943-1946 மதுரைப் பண்டிதர் பயிற்சி. (மனைவி இறப்பால் பரீட்சைக்குத் தோற்றவில்லை)<br>சென்னை பல்கலைக்கழக வித்துவான் பரீட்சைக்குச் சென்றமை - 1952. |

பதவிகள் : 1947-1949 யா.ஆசிரியர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்.
31.12.1970 பணி ஓய்வு.

பிற பணிகள் : புராணப் படிப்பு. பண்டிதமணியுடன் கீரிமலையில் கந்தபுராணம் படித்தல். அவர் கட்டளைப்படி பயன்சொல்லவும் தொடங்குதல்.
1988-1998 தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவிலில் திருமுறைப் படிப்பு
1975-1982 அளவெட்டி சைவ வாலிபர் சங்கச் செயலாளர்
1982-1985 மேற்படி சங்கத் தலைவர்.

முதல் மணம் : 1941-1946 (கொக்குவில் மேற்கு) கைலாயபிள்ளையின் ஏகபுத்திரி சரஸ்வதி

ஏகபுத்திரி : சீதாலட்சுமி பாலயோகன்
B.Sc பேராதனை - லண்டன்.

மறுமணம் : 1947-2000 (அளவெட்டி)
கணபதிப்பிள்ளை புத்திரி பொன்னம்மா

பிள்ளைகள் : ஸ்ரீஸ்கந்தராசா ஆசிரியர் (ஓய்வு)
சிவானந்தராசா படவரைஞர் (ஓய்வு)
சிவஞானராசா சங்கீத ஆசிரியர்
யோகர்சுவாமிகள் கட்டளைப்படி இசைத்துறையிலும் உள்ளனர்.

முப்பத்தைந்துக்கு மேற்பட்ட நூல்கள் இயற்றினார்.

கலைமகள் கொம்பியூட்டர் பிறிண்டேர்ஸ்,
யாழ். பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி. Tel. No. 021-222-3116